1970 பிப்ரவரி 28]

மாணவர்கள் அதிலே சேர்க்கப்படுகிருர்கள். அதையொட்டி கொடுக்கப்படும் அந்தப் பயிற்சிக்குப் போதுமான காலம் இல்லாமல் இருப்பதாகக் கருதியதால் இரண்டாண்டுகளாக இருந்ததை மூன்ருண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

Southern Regional Committee of the All-India Council of Technical Education.

நிபுணர் குழுவினுல் சிபாரிசு செய்யப்பட்டு மூன்ருண்டுகளாக்கப் பட்டு இருக்கிறது. எவ்வளவு பேர் வேலையில்லாமல் இருக்கிருர் கள், தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிருர்களா என்ற குறிப்பு இல்லை. அதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரிக்கப்படும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்தப் பட்டயப் படிப்புப் படிக்கின்றவர்கள் படிக்கின்ற சப்ஜெக்டுகள்தவிர வேறு ஏதாவது மொழி அங்கு படிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறதா? அப்படிப் பட்ட மொழியின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

புதிய கல்லூரிகள் திறப்பு

*136 வினு—**திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-70-ல் தமிழகத்தில் புதிய கல்லூரிகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்திருக்கிறதா?

(இ) ஆம் என்ருல், எத்தனை கல்லூரிகள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1969-70-ம் ஆண்டில் அரசு ஆறு கல்லூரிகளை ஆரம்பித்திருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இந்த ஆறு கல்லூரிகளிலே பெண் களுக்கு என்று எத்தனை கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறது? இந்திய மாதர் சங்கம், பெண்களுக்காக உள்ள கல்லூரிகள் போதாது, நாங்கள் ஆண்களோடு சேர்ந்து படிப்பது அவ்வளவு சரியாக இருக் காது என்று சொல்லியிருக்கிறதே அதுபற்றி அரசாங்கம் செய்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 6 கல்லூரிகளிலே பெண்களுக்காக 3 கல்லூரிகளும், ஆண்களுக்காக 3 கல்லூரிகளும்; ஆக 6 கல்லூரிகள் ஆரம்பித்திருக்கிறது. திண்டி வனத்தில் ஆண்கள் கல்லூரி ஒன்றும், நாமக்கல்லிலே பெண்கள் கல்லூரி ஒன்றும், நந்தனத்தில் ஆண்கள் கல்லூரி ஒன்றும். மேலூரிலே ஆண்கள் கல்லூரி ஒன்றும், புதுக்கோட்டையிலே பெண்கள் கல்லூரி ஒன்றும், முசிரியில் பெண்கள் கல்லூரி ஒன்றும் ஆக இப்படி ஆண்களுக்கு 3 கல்லூரிகள், பெண்களுக்கு 3 கல்லூரி கள் ஆரம்பித்திருக்கிறது. எந்த அளவுக்குத் தகுதியும், தேவை யும் இருக்கிறதோ அதைக் கருதி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

[1970 பிப்ரவரி 28

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் கலைக்கல்லூரி ஆரம்பிக்க, ஆரம்ப வேலைகள் முன்னால் துவங்கப்பட்டன. அது எந்த நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிக் குறிப்பு எதுவும் வரவில்லை. ஒரு கல்லூரி அமைக்க விதிக்கப்படுகிற நிபந்தனைகள் மன்னார்குடியிலேயிருந்து வந்த தாகவோ, முயற்சி எடுக்கப்பட்டதாகவோ எந்தக் குறிப்பும் வர வில்லை.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவா அவர்களே, இந்தக் கல்லூரிகள் அமைப்பதற்கு முன்பணமாக ரூ. 5 லட்சம் கட்ட வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதாகக் கூறப்படுகிறது. அமைச்சர்கள் இருக்கிற பகுதிகளில் தங்களுடைய சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த 5 லட்ச ரூபாய் கட்டப்பட முடிகிறது. மற்றப் பகுதிகளில் இவ்வாறு பணம் கட்டிக் கல்லூரிகள் அமைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இது மாதிரியாகத் திட்டத்தை மாற்றி அமைத்து, முன்பணம் ரூ. 5 லட்சம் கட்டாமல் கல்லூரிகள் அமைப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் அரசாங்கக் கல்லூரி, தனியார் கல்லூரி எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 33 கல்லூரிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. கல்லூரிகள் எல்லாமே அமைச்சர்கள் இருக்கிற பகுதிகளில் அமைக்கப்பட்டு விட்டதாக யாரும் சொல்ல முடியாது. எங்கெங்கே கல்லூரிகள் எற்படுவதற்கு வாய்ப்பு, வசதி இருக் கிறதோ, எங்கெங்கே நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகின்றனவோ, எங்கெங்கு கல்லூரிகள் தேவையாக இருக்கின்றனவோ அந்த இடங்களில் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன. அதோடு, பல்கலைக் கழகத்தின் ஒரு குழு எங்கெங்கு கல்லூரி அவசியம் என்பதைப் பரிசீலித்து நிர்ணயிக்கிறது. ஆங்காங்கு உயர்நிலைப் பள்ளிகளி லுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பக்கத்தில் கல்லூரி இருக்கிற தன்மை இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தக் குழு பரிசீலனைசெய்து அனுமதி அளித்தபிறகு, அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே இதில் பாகுபாடு எதுவும் இல்லை. ஆங்காங்கு தேவையின் அடிப்படையில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். மருதாசலம் : கோவையிலே பெண்கள் தனியார் கல்லூரி ஒன்று இருக்கிறது. அங்கே அரசினர் பெண்கள் கல்லூரி ஒன்று எற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசினர் கல்லூரி இருந்து தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. தேவையை நிறைவேற்றுவதற்குத் தனியார் கல்லூரி இருக்கிறது. அரசினர் கல்லூரி அல்லது தனியார் கல்லூரி எதேனும் ஒன்று இருந்தால் போதுமானது.

1970 பிப்ரவரி 28]

திரு. சொ. கோவிந்தராசன்: புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு மாணவர்களிடமிருந்து வசூல் செய்யும் ட்யூஷன் பீசுக்கு ஈடாக ரூ. 50 கொடுக்கப்பட்டு வருகிறது. அதை அதிகப் படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புதியதாக ஆரம்பிக்கப் பட்ட தனியார் கல்லூரிகளுக்கு ரூ. 50 தரப்படுகிற நிலைமை இருந்து வருகிறது. பல்கலைக்கழகம் ஆரம்பத்தில் ஒரு கணக்குப் போட்டு, அதன் பலனை இம்மாதிரி முதல் வகையிலே தரவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அவை ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி: புதியதாகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு ரூ. 5 லட்சம் தரவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் போதுமான கட்டடம் இல்லாத காரணத்தினால், தாற்காலிகமாக சங்கடமான இடத்தில், சிறிய இடங்களில், கல்லூரிகள் துவக்கப்படுகின்றன. பிறகு எத்தனை ஆண்டுகளுக்குள் கட்டடம் கட்டப்படவேண்டும் என்ற வரையறை இருக்கிறதா? கட்டடம் கட்டுவதற்கு காலதாமதம் ஆனால், பட்டப்படிப்புப் படிப்பதற்கு வசதி செய்து தரக்கூடிய நிலைமை அந்த இடங்களில் ஏற்படமுடியாமல் போகிறது. அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கூடுமானவரையில் கட்டடம் கட்டவேண்டும் என்றுதான் விரிவான அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான பணிகளில் ஈடுபட்டுக் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன. அந்த உத்தேசத்தில் தான் கல்லூரி கட்டுவதற்கு கிட்டத்தட்ட 40 ஏக்கர் நிலம் தர வேண்டும், முன்பணம் ரூ. 5 லட்சம் தரவேண்டும் என்றெல்லாம் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. கட்டடத்திற்காக முதல் தவணையான ரூ. 7, 8 லட்சமும், பிறகு ரூ. 6, 7 லட்சமும் ஒதுக்கப் படுகிறது. கட்டடம் கட்டுவதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆனாலும், தாற்காலிகமாகவாவது மேற்படிப்புக்கு வேண்டிய கட்டட வசதி செய்துதரப்படுகிறது. ஆங்காங்கு அமைக்கப்படுகிற கல்லூரிகளுக்கு இந்த மாதிரி நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, அந்த அடிப்படையில் கட்டடம் கட்டப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. மா. பா. சாரதி: வேலூரில் பல நாட்களாகப் பெண்கள் கல்லூரி வேண்டும் என்று மாநாடுகள்மூலமாகவும், கல்வி அதிகாரிகள்மூலமாகவும், பொது மக்களின் கோரிக்கைகள்மூலமாகவும், அமைச்சர் அவர்களை நேரில் பார்த்தும் கேட்கப்பட்டிருந்தும், இப்பொழுது வெளியிடப்பட்ட பட்டியலில் வேலூரில் பெண்கள் கல்லூரி சேர்க்கப்படவில்லை. காரணம் தெரியவில்லை. இந்த ஆண்டு முடியவில்லை என்றால், ஆண்கள் கல்லூரியில் பெண்கள் சேர்ந்து

படிப்பதற்கு அனுமதி அளித்தாலாவது, இப்பொழுதுள்ள நெருக்கடி நிலைமை தீரும். அப்படிப்பட்ட முடிவு எடுக்க உத்தேசம் இல்லை என்றால், ரூ. 5 லட்சம் கட்டவேண்டுமென்றால், நாங்கள் கஷ்டப்பட்டுக் கட்டிவிடுகிறோம். அப்பொழுதாவது அங்கு ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலூருக்குப் பக்கத்தில் சாட்பாடியில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கிறது. வேலூருக்குப் பக்கத்தில் அண்மையில் வாலாஜாபாத்தில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கிறது. இரண்டு பெண்கள் கல்லூரிகள் வேலூரைச் சுற்றி இருக்கின்றன. அதன் காரணமாக வேலூர் நகரத்தில் தனியாகப் பெண்கள் கல்லூரி தேவைப்படாது என்ற கருத்து இருக்கிறது. பல இடங்களில் அண்மையில் பெண்கள் கல்லூரி வைக்கப்படவில்லை. பெண்கள் 30, 40 மைல் கல்லூரிக்காகப் போகவேண்டியிருக்கிறது என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்னுள் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் புகுமுக வகுப்பில் ஆண்கள் மட்டும் தான் சேர்க்கப்பட வேண்டும், பெண்கள் சேர்க்கப்படக்கூடாது என்று கூறிவந்தார்கள். பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எஸ்ஸி., ஆகிய வகுப்புகளில் தான் ஆண்களும், பெண்களும் சேர்க்கப்படலாம் என்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற துணைவேந்தர் அவர்கள் அதையும் பரிசீலனை செய்து, உயர்நிலைப் பள்ளிகளில், பி.ஏ., பி.எஸ்ஸி. முதலிய வகுப்புகளில் பெண்களும் ஆண்களும் சேர்ந்து படிப்பது போல, கல்லூரிகளில் புகுமுக வகுப்புகளிலும் ஆண்களையும், பெண்களையும் சேர்க்கலாமா என்பதைப்பற்றி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அது துணைவேந்தர் அவர்களின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : கல்லூரி அமைக்கப் போதுமான இடவசதி கொடுத்து, அரசாங்கத்திலுல் நிர்ணயிக்கப்பட்ட தொகையும் கட்டுவதற்கு முன்வந்தால் மன்னார்குடியில் அரசாங்கம் ஒரு கல்லூரி அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அம்மாதிரி கோரிக்கை வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆர். கருப்பையா : காட்டூரில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்று ஒரு விண்ணப்பம் இருந்ததே; அதைப்பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டது? மேலும், லால்குடியில் நடந்த விவசாயக் கருத்தரங்கில் விவசாயப் பல்கலைக் கழகம் திருச்சியில் அமையவேண்டும் என்று அமைச்சர்களால் திட்டவட்டமாகக் கூறப்பட்டது. ஆனால் விவசாயப் பல்கலைக் கழகம் இப்பொழுது கோவையில் அமைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இரு அமைச்சர்கள் கோவையில் இருந்து வருவதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டதா அல்லது வேறு ஏதாவது **சிறப்புக் காரணம்** உண்டா ?

1970 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காட்டூரில் கல்லூரி ஆரம்பிப்பது பற்றிய தகவல் இப்பொழுது இல்லை. விவசாயப் பல்கலைக்கழகத்தைப் பற்றிய கேள்வியை விவசாய அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டும். கோவையிலிருக்கும் விவசாயக் கல்லூரியை விவசாயப் பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கும் முயற்சி எடுக்கப்பட்டு, அதற்கேற்றபடி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : கல்லூரியில் படித்துவிட்டுப் பல ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வரையில் தாற்காலிகமாகவாவது புதிய கலைக் கல்லூரிகள் திறக்கப்படாமல் நிறுத்திவைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட யோசனைகளைச் சில பேர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம் : வருகிற ஆண்டில் எத்தனை கல்லூரிகள் புதியதாகத் திறப்பதாக உத்தேசம் இருக்கிறது? அமைச்சர்கள் இருக்கிற இடங்களில் திறக்கப்படுகின்றன. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற இடங்களில் திறக்கப்படுகின்றன என்ற புகார் . . . (மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் இருக்கும் இடத்தில் ஒரு காலேஜ் வேண்டும்). நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்கிறேன். அதற்கு வேண்டிய பணமும், அதற்கு வேண்டிய தாற்காலிகமான இடமும் (டெம்பரரி அகாமடேஷன்) தந்து உதவி செய்தால், இந்த ஆண்டு திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வருகிற ஆண்டில் நான்கு அரசினர் கல்லூரிகள் வைப்பதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் பார்த்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் ஊரில் கல்லூரி வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு, அதற்கு எந்தெந்த வகையில் உதவி செய்யலாமோ அதெல்லாம் செய்யப்படுகிறது. மேற்கொண்டு திருத்தணிக் கோவில் தொகையிலிருந்தும் ஓரளவுக்குப் பணம் ஒதுக்கித் தந்து, எந்த அளவுக்கு இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருக்கலாம் என்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அமைச்சர்கள் இருக்கிற இடங்களில் கல்லூரிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் இருக்கிற இடத்தில் பல்கலைக்கழகம் தான் இருக்கிறது. (திரு. கே. விநாயகம் : நீங்களே, ஒரு பல்கலைக் கழகம்.) என்னுடைய தொகுதியிலே இருக்கிற கல்லூரிகள் நீண்ட காலத்திற்கு முன்னாலேயே அமைக்கப்பட்டுவிட்டன. புதிய கல்லூரி எதையும் எந்த அமைச்சர் இடத்திலும் வைத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் கல்லூரி அமைப்பதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.